# க.பொ.த (உயர் தர)ப் பரீட்சை - 2019

## 42 - இந்து சமயம்

## பழைய பாடத்திட்டம்

## புள்ளி வழங்கும் திட்டம்

இது இரண்டு பகுதிகளைக் கொண்டது. பகுதி ஒன்றின் மூன்று வினாக்களில் ஏதேனும் இரண்டு வினாக்களுக்கும் பகுதி II இல் உள்ள 5 வினாக்களில் ஏதேனும் மூன்று வினாக்களுக்குமாக மொத்தம் 5 வினாக்களுக்கு பரீட்சார்த்திகள் விடை எழுத வேண்டும். ஒரு வினாவுக்கு 20 புள்ளிகள் வீதம் பத்திரம் II ற்கு மொத்தம் 100 புள்ளிகள் வழங்கப்படும்.

- பத்திரம் I க்கு 50 x 2 = 100 புள்ளிகள்
- பத்திரம் II க்கு 5 x 20 = 100 புள்ளிகள்

இறுதிப்புள்ளி கணக்கிடல்

| | | |
|---|---|---|
| பத்திரம் I | - | 100 புள்ளிகள் |
| பத்திரம் II | - | 100 புள்ளிகள் |
| இறுதிப்புள்ளிகள் | - | 200 ÷ 2 = 100 |

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

පැරණි නිර්දේශය/ பழைய பாடத்திட்டம்/ Old Syllabus

OLD

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2019 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2019 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2019

05.08.2019 / 0830 – 1030

හින්දු ධර්මය I
இந்து சமயம் I
Hinduism I

42 T I

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
Two hours

**அறிவுறுத்தல்கள் :**

- ✳ **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.
- ✳ விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
- ✳ விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.
- ✳ **1** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிந்தெடுத்து, **அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய** விடைத்தாளில் **புள்ளடி** (×) இடுவதன் மூலம் காட்டுக.

● **1** தொடக்கம் **5** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் **ஐந்து** விடயங்கள் வீதம் தரப்பட்டுள்ளன. அவற்றுள் **ஒன்று** ஏதோவொரு காரணத்தினால் ஏனையவற்றுடன் பொருந்தாது. **பொருந்தாததைத்** தெரிவுசெய்க.

**1.** (1) பிருதுவி (2) தேயு (3) வாயு
(4) அப்பு (5) நிருதி

**2.** (1) சிவபுராணம் (2) விஷ்ணுபுராணம் (3) பிரமபுராணம்
(4) சூரியபுராணம் (5) பெரியபுராணம்

**3.** (1) சஜாதீயபேதம் (2) அப்பிரதக்சித்தி (3) சுவகதபேதம்
(4) ஜீவபரஸ்பரபேதம் (5) விஜாதீயபேதம்

**4.** (1) நம்மாழ்வார் (2) பேயாழ்வார் (3) இளையாழ்வார்
(4) பெரியாழ்வார் (5) பூதத்தாழ்வார்

**5.** (1) தாரணை (2) பிராப்தி (3) பிரத்தியாகாரம்
(4) ஆசனம் (5) நியமம்

● **6** தொடக்கம் **10** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் **ஐந்து** சோடிச் சொற்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒரு சோடியிலுள்ளவை ஒன்றுடன் ஒன்று பொருந்தவில்லை. **பொருந்தாத** அச்சோடிச் சொல்லைத் தெரிவுசெய்க.

**6.** (1) கர்சனம் - ஆலயம் அமைப்பதற்குரிய இடத்தைப் பண்படுத்துவது
(2) நித்தியகிரியை - தினமும் நடைபெறுவது
(3) கொடிமரம் - பசுவைக் குறித்து நிற்பது
(4) பிரதிஷ்டை - ஆலயங்களில் திருவுருவங்களை நிலைநிறுத்துவது
(5) உற்சவம் - கிரியைகளின் குற்ற நிவர்த்தியின் பொருட்டு ஆற்றப்படுவது

**7.** (1) ஆசாரபக்தி - சடங்குகளோடு கூடியது
(2) நாரதர் - பக்தி சூத்திரம்
(3) பிரபக்தி - பூரண சரணாகதி
(4) வாத்சல்யம் - காதலன் காதலிக்கு இடையிலான உறவு
(5) சகியம் - தோழமை உறவு

**8.** (1) விகற்பம் - தன்னைவிடப் பிறர் ஒவ்வாரெனல்
(2) கற்பம் - பிடித்ததைப் பிடித்திருத்தல்
(3) குரோதம் - ஒன்றிற்கு ஆசைப்படல்
(4) அஞர் - எப்போதும் துக்கப்படல்
(5) மதம் - அகங்காரம் கொள்ளுதல்

**9.** (1) மூன்றாம் சிவாலயம் - வானவன் மாதேவீஸ்வரம்
(2) நான்காம் சிவாலயம் - மின்னேரியா தோப்பவாவி
(3) சித்தாந்த தீபிகை - ஜே.எம். நல்லசாமிப்பிள்ளை
(4) திருக்கோணேஸ்வரம் - தட்சணகைலாய புராணம்
(5) திருக்கேதீஸ்வரம் - தாழிக்குமரன்

**10.** (1) இந்துபோர்ட் சு. இராசரத்தினம் - சைவாசிரியர் கலாசாலை
(2) சேர் பொன். இராமநாதன் - பரமேஸ்வரன் ஆலயம்
(3) சபாபதி நாவலர் - சென்னை சித்தாந்த வித்தியானுபாலன் அச்சியந்திரசாலை
(4) இரத்தினா நவரத்தினம் - ஆங்கில மொழியில் திருவாசக விளக்கம்
(5) ஆறுமுகநாவலர் - கோப்பாய் வித்தியாநுபாலன அச்சியந்திரசாலை

● **11** தொடக்கம் **15** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் **'அ'**, **'ஆ'** என்னும் நிரல்களின் கீழ் சில விடயங்கள் தரப்பட்டுள்ளன. **'அ'** நிரலுக்கு ஏற்ற விதத்தில் **'ஆ'** நிரல் பொருத்தமாக ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள சேர்மானத்தைத் தெரிவுசெய்க.

**11.**

| அ | | ஆ |
|---|---|---|
| (i) ஆப்தம் | A | - அனுபலப்தி |
| (ii) சாங்கியம் | B | - ரகுநாதர் |
| (iii) இன்மை | C | - சுருதிப்பிரமாணம் |
| (iv) நவநியாயக் கொள்கை | D | - சமவாயம் |
| (v) கணாதர் | E | - யோகம் |

(1) C E A B D (2) C E B A D (3) C E D B A (4) E C B A D (5) E C B D A

**12.**

| அ | | ஆ |
|---|---|---|
| (i) இருக்குவேதம் | A | - ஆசாரமே மேலான தர்மம் |
| (ii) மகாபாரதம் | B | - பிரதமா தர்மம் |
| (iii) முண்டக உபநிடதம் | C | - சத்ய மேவஜயதே |
| (iv) தைத்திரிய உபநிடதம் | D | - அகிம்சையே மேலான தர்மம் |
| (v) மனுஸ்மிருதி | E | - தர்மம் சர |

(1) B C D E A (2) B D C E A (3) C B A E D (4) D A B C E (5) E A C D B

**13.**

| | அ | | ஆ |
|---|---|---|---|
| (i) | பெரியானைக்குட்டி சுவாமிகள் | A | - கோவிந்தசாமி |
| (ii) | சித்தானைக்குட்டி சுவாமிகள் | B | - முத்தியானந்தர் |
| (iii) | நவநாதசித்தர் | C | - குயின்ஸ்பெரித் தோட்டம் |
| (iv) | கடையிற் சுவாமிகள் | D | - கப்பித்தாவத்தை |
| (v) | யோகர் சுவாமிகள் | E | - மாவிட்டபுரம் |

(1) B C A E D (2) C D A B E (3) D A B C E (4) D A B E C (5) D A C B E

**14.**

| | அ | | ஆ |
|---|---|---|---|
| (i) | உதயகிரி குகைக்கோயில் | A | - சோழர் வளாகம் |
| (ii) | ஜலசயனம் | B | - ஏரன் நரசிம்மர் |
| (iii) | ஐராவதேஸ்வரம் | C | - இராஜசிம்மன் பாணி |
| (iv) | பிருகதீஸ்வரம் | D | - லெபாஷி வீரபத்திரர் கோயில் |
| (v) | விஜயநகர நாயக்கர் | E | - கேரளாந்தகன் வாயில் |

(1) B C A D E (2) B C A E D (3) B C E A D (4) C B A D E (5) C B A E D

**15.**

| | அ | | ஆ |
|---|---|---|---|
| (i) | அத்வைதம் | A | - வீரசைவர் |
| (ii) | கற்பம் | B | - அருத்தாபத்தி |
| (iii) | கன்மம் | C | - இருள்மலம் |
| (iv) | இட்டலிங்கம் | D | - மேவல் |
| (v) | மத்துவர் | E | - பன்மைவாதம் |

(1) B C A D E (2) B C D A E (3) B C D E A (4) E B C D A (5) E B D A C

● **16** தொடக்கம் **30** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் அதன் கீழே தரப்பட்டுள்ளவற்றுள் மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

**16.** வடமொழிச் சாத்திர மரபிற்கும் தமிழ்ப்புலமை மரபிற்கும் இடையிலான ஒரு தொடரோட்டத்தை எடுத்துக்கூறும் நூல்

(1) பெரியபுராணம் (2) திருமந்திரம் (3) கந்தபுராணம்
(4) திருவிளையாடற்புராணம் (5) சிவபுராணம்

**17.** இயற்கையோடு இறைவனைப் போற்றிப் பாடுவதில் முதன்மை பெறுபவர்

(1) சுந்தரர் (2) அப்பர் (3) சம்பந்தர்
(4) சேந்தனார் (5) கபிலர்

**18.** 'சிற்பக் கலைக் களஞ்சியம்' எனப் போற்றப்படுவது

(1) தர்மராஜரதம் (2) வீமரதம் (3) சகாதேவரதம்
(4) கொற்றவைரதம் (5) அர்ச்சுனன்ரதம்

**19.** இசுருமுனிய சிற்பங்கள் நிர்மாணிக்கப்பட்ட காலம் எது?

(1) பொலன்னறுவைக் காலம் (2) அனுராதபுரக் காலம்
(3) கம்பளைக் காலம் (4) குருநாகலை இராச்சிய காலம்
(5) கண்டிராச்சிய காலம்

**20.** தெவிநுவர விஷ்ணு ஆலயம் பற்றிக் குறிப்பிடும் கல்வெட்டு எது?
(1) பதவியாக் கல்வெட்டு
(2) நிலாவெளிக் கல்வெட்டு
(3) 2 ஆம் பராக்கிரமபாகு கல்வெட்டு
(4) கோணேசர் கல்வெட்டு
(5) மெதிரிகிரிய கல்வெட்டு

**21.** கொழும்பு விவேகானந்த சபை தாபிக்கப்பட்ட ஆண்டு எது?
(1) 1888 (2) 1902 (3) 1923 (4) 1930 (5) 1955

**22.** சிவனடியார் தோற்றப்பொலிவினை "ஆரம் கண்டிகை ஆடையும் கந்தையே" எனக் குறிப்பிட்டவர்
(1) திருமூலர்
(2) கணம்புல்லர்
(3) சேக்கிழார்
(4) சம்பந்தர்
(5) சுந்தரர்

**23.** 'சகலாகம பண்டிதர்' எனச் சிறப்பிக்கப்படுபவர்
(1) மெய்கண்ட தேவர்
(2) அருணந்தி சிவாச்சாரியார்
(3) உமாபதி சிவாச்சாரியார்
(4) பரஞ்சோதி முனிவர்
(5) மறைஞான சம்பந்தர்

**24.** சங்கம வழிபாட்டின் உயர்வு பற்றிக் குறிப்பிடும் முதல்நூல்
(1) திருத்தொண்டர்தொகை
(2) திருத்தொண்டர்திருவந்தாதி
(3) திருத்தொண்டர்புராணம்
(4) திருத்தொண்டர்சரிதம்
(5) திருத்தொண்டரந்தாதி

**25.** சைவ சமயி ஆவதற்கான அடிப்படைத் தகுதியாகக் கருதப்படுவது
(1) தீட்சை பெற்றுக்கொள்ளல்
(2) விபூதி தரித்தல்
(3) உருத்திராக்கம் அணிதல்
(4) ஆலய வழிபாடு செய்தல்
(5) அறத்தின் வழிநின்றொழுகுதல்

**26.** ஆதிசங்கரர் இயற்றிய நூல்கள் அடங்கிய தொகுதி
(1) பஜகோவிந்தம், வேதார்த்தசங்கிரகம், அணுவியாக்கியானம், சிவானந்தலகரி, நித்தியதிருவாதனப்படி
(2) விவேகசூடாமணி, சுப்பிரமணியபுஜங்கம், வேதாந்ததீபம், பாரததாற்பரிய நிர்ணயம், சர்வமூலம்
(3) வேதாந்தசாரம், ஆரியாசதகம், உபதேசகஸ்ரி, சௌந்தர்யலகரி, சூத்திரபாடியம்
(4) ஆரியாசதகம், சிவானந்தலகரி, சுப்பிரமணியபுஜங்கம், விவேகசூடாமணி, பஜகோவிந்தம்
(5) வேதார்த்தசங்கிரகம், பஜகோவிந்தம், மநீஷாபஞ்சகம், நித்தியதிருவாதனப்படி, பாகவததாற்பரிய நிர்ணயம்

**27.** சி.த.மு. பசுபதிச் செட்டியாருடன் தொடர்புடைய விடயங்களை உள்ளடக்கிய தொகுதி
(1) திருக்கேதீச்சரம், மதுரைத் தமிழ்ச்சங்கம், கொச்சிக்கடை பொன்னம்பலவாணேஸ்வரம், கொழும்பு சட்டக்கல்லூரி, விக்டோரியா வாசிகசாலை
(2) இந்துசாதனம் பத்திரிகை, கும்பகோணம் அரசினர் கல்லூரி, வண்ணை வைத்தீஸ்வரர் ஆலயம், இந்துவாலிபர் சமாசம், வண்ணை சைவப்பிரகாச வித்தியாசாலை
(3) சைவபரிபாலன சபை, சைவ ஆங்கில பாடசாலை, சைவசித்தாந்த சமாஜம், சைவாசிரியர் கலாசாலை, திருக்கேதீச்சரம்
(4) விக்டோரியா வாசிகசாலை, சைவபரிபாலன சபை, திருக்கேதீச்சரம், சைவவித்தியா விருத்திச் சங்கம், யாழ் இந்துக்கல்லூரி
(5) இந்துவாலிபர் சமாசம், திருக்கேதீச்சரம், யாழ் இந்துக்கல்லூரி, விக்டோரியா வாசிகசாலை, சைவாசிரியர் கலாசாலை

**28.** இந்து சோதிடக் கலையுடன் தொடர்புடைய விடயங்களை உள்ளடக்கிய தொகுதி
(1) சந்தானதீபிகை, செகராசசேகரமாலை, கார்கிசம்ஹிதை, பிரம்மகுப்தர், திதி
(2) சரகர், பிருஹத்சம்ஹிதை, செகராசசேகரமாலை, கரணம், நாழிகைக் கணக்கர்
(3) வராகமிகிரர், சகாதேவன், மன்வந்தரம், சுக்கிலபக்ஷம், தன்வந்திரி
(4) லலாட தேவர், புளிசர், பஞ்சசித்தாந்திகை, ஔஷதிசூக்தம், ஆரியபட்டர்
(5) கன்னல், யோகயாத்திரா, பாஸ்கராச்சாரியார், சதானந்தர், அட்டாங்க ஹிருதயசம்ஹிதை

**29.** விஸ்ணு அவதாரங்களின் பெயர்கள் மாத்திரம் அடங்கிய தொகுதி
(1) நாராயணர், கிருஸ்ணர், நரசிங்கர், புத்தர், வியாசர்
(2) மத்ஸ்யம், வாமனம், கூர்மம், நரசிம்மம், கல்கி
(3) கல்கி, நாராயணர், வாசுதேவர், இராமர், வைகுந்தர்
(4) வாமனம், கூர்மம், மத்ஸ்யம், அநந்தசயனர், கிருஸ்ணர்
(5) கிருஸ்ணர், கூர்மம், இராமர், பாதராயணர், வராகம்

**30.** சைவசித்தாந்த அட்டகத்துக்குரிய நூல்கள் அடங்கும் தொகுதி
(1) சிவப்பிரகாசம், இருபா இருப∴து, கொடிக்கவி, உண்மை விளக்கம், திருவருட்பயன்
(2) திருவருட்பயன், சிவப்பிரகாசம், கொடிக்கவி, உண்மை விளக்கம், வினாவெண்பா
(3) திருவருட்பயன், சிவப்பிரகாசம், வினாவெண்பா, போற்றிப்ப∴றொடை, கொடிக்கவி,
(4) சிவப்பிரகாசம், திருவருட்பயன், சிவஞானபோதம், வினாவெண்பா, கொடிக்கவி
(5) நெஞ்சுவிடுதூது, வினாவெண்பா, சங்கற்ப நிராகரணம், இருபா இருப∴து, கொடிக்கவி

● **31** தொடக்கம் **35** வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் ஒரு தலைப்பின் கீழ் ஐந்து விடயங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் உரிய தலைப்புடன் **பொருந்தாததைத்** தெரிவுசெய்க.

**31. பகவத்கீதையின் கர்மயோகம்**
(1) நிஷ்காமிய வினையாற்றத் தூண்டுகிறது.
(2) செயலில் துறவை வலியுறுத்துகிறது.
(3) அர்ச்சுனனை செயல்வீரனாக்கியது.
(4) கிருஷ்ணரிடத்தில் பக்திசெய்யத் தூண்டுகிறது.
(5) ஸ்வதர்மம் பற்றி விளக்குகிறது.

**32. புருடார்த்தங்களில் ஒன்றான 'பொருள்'**
(1) உலகியல் வாழ்வுக்கு இன்றியமையாதது.
(2) பஞ்சயக்ஞங்களாற்ற அவசியமானது.
(3) ஆன்ம ஈடேற்றத்துக்குத் துணைசெய்வது.
(4) அறத்தின் வழியில் ஈட்டப்பட வேண்டியது.
(5) புருடார்த்தங்களில் தலையாயது.

**33. சாங்கியம் கூறும் பிரபஞ்சக் கொள்கை**
(1) இரண்டு அடிப்படை மூலப்பொருள்களைச் சாதிப்பது.
(2) முக்குணங்களுடன் தொடர்புபட்டது.
(3) சத்காரியவாதம் பற்றி விவரிப்பது.
(4) பகவத்கீதையில் குறிப்பிடப்பட்டுள்ளது.
(5) பிரகிருதிக்கு முதன்மையளிக்கிறது.

**34.** விரதம்

(1) உணவை ஒறுத்தலோடு தொடர்புடையது.
(2) புலன்களை ஒருநிலைப்படுத்த உதவுகின்றது.
(3) உடல், உள்ளத் தூய்மையுடன் தொடர்புபட்டது.
(4) இறைவன் திருவருளைப் பெறுவதற்கான வழியாகும்.
(5) நற்பண்புகளை வளர்த்தலுக்கான உபாயமாகும்.

**35.** பிரம்மசூத்திரம்

(1) பாதராயணரால் இயற்றப்பட்டது.
(2) உத்தரமீமாம்ச சூத்திரம் எனப்படுகிறது.
(3) உபநிடதங்களின் சாரமாகவும் திரண்ட வடிவமாகவும் திகழ்கிறது.
(4) வைணவ சம்பிரதாய மரபுக்கு உட்பட்டது.
(5) ஆதிசங்கரரால் உரை செய்யப்பட்டது.

● மேல்வரும் பகுதியில் A தொடக்கம் J வரையில் தரப்பட்டுள்ள சொற்களுள் இவ்விரண்டு சொற்கள் குறிப்பிட்டவொரு விடயத்தோடு தொடர்புடையவை. அவற்றின் பொருத்தப்பாட்டின் அடிப்படையில் **36** தொடக்கம் **40** வரையுள்ள ஒவ்வொரு வினாவுக்கும் பொருத்தமான சேர்மானத்தைத் தெரிவுசெய்க.

| | | | | |
|---|---|---|---|---|
| A<br>சரமசுலோகம் | B<br>தசகாரியங்கள் | C<br>குடக்கூத்து | D<br>பிரசங்கம் | E<br>திரிதாது |
| F<br>நிட்டை விளக்கம் | G<br>கமண்டலம் | H<br>உபாசனபரம் | I<br>பஞ்சாங்கம் | J<br>நாடிக்கவி |

**36.** ஊடக வகைமாதிரியுடன் தொடர்புடைய சேர்மானம்
(1) AH (2) BI (3) DI (4) EJ (5) FG

**37.** வைணவ சம்பிரதாயத்துடன் தொடர்புடைய சேர்மானம்
(1) AH (2) BC (3) BD (4) BG (5) FH

**38.** சைவசித்தாந்த மெய்யியலுடன் தொடர்புடைய சேர்மானம்
(1) AH (2) BF (3) BJ (4) CI (5) HJ

**39.** கிராமிய இந்துக் கலை வடிவங்களுள் ஒன்றாகிய கரகத்துடன் தொடர்புடைய சேர்மானம்
(1) AH (2) CG (3) CJ (4) DF (5) DG

**40.** இந்து மருத்துவவியலுடன் தொடர்புடைய சேர்மானம்
(1) AJ (2) EF (3) EJ (4) GI (5) HI

● இலங்கையில் இந்துசமயம், சைவசித்தாந்தம் ஆகியன பற்றிய விடயங்கள் சில கீழே தரப்பட்டுள்ளன. அவற்றை அடிப்படையாகக் கொண்டு **41** தொடக்கம் **45** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் பொருத்தமான சேர்மானத்தைத் தெரிவுசெய்க.

**இலங்கையில் இந்துசமயம்**

A - இந்துக் கோயில்கள், தெய்வங்களின் திருப்பெயர்கள் தொடர்பிலான செய்திகள் இக்காலத் தூது இலக்கியங்களில் விரவிக் காணப்படுகின்றன.

B - சிவபாலித, கோபால, வேல, கணகுட்டச முதலிய பெயர்கள் இந்துசமயத் தெய்வங்களுடன் தொடர்புடையவையாகப் பிராமிக் கல்வெட்டுக்களில் அடையாளம் காணப்பட்டுள்ளன.

C - கோணேசர் கல்வெட்டு, திருக்கரசைப்புராணம் போன்றன இக்காலப்பகுதியில் எழுச்சிபெற்றன.

D - ஆறாம் பராக்கிரமபாகு காலத்தில் கோட்டை இராச்சியப் பகுதியில் அமைந்திருந்த முருகன் கோயில் பற்றிப் பூவைவிடுதூது விபரிக்கின்றது.

E - அனுராதபுரக் காலத்தில் நிலவிய இந்துசமயத்தின் சிறப்பியல்புகளை பாளி நூல்களும் பிராமிக் கல்வெட்டுகளும் எடுத்தியம்புகின்றன.

F - 'தென்கைலை' எனப்படும் கோணேசுவரத் தலம் யாழ்ப்பாண ஆரியச் சக்கரவர்த்திகளின் தொடர்ச்சியான போஷிப்பைப் பெற்று விளங்கியது.

**41.** அனுராதபுரக் காலத்தில் நிலவிய இந்துசமயத்துடன் தொடர்புடைய சேர்மானம்

(1) AD (2) BC (3) BD (4) BE (5) DF

**42.** ஆரியச் சக்கரவர்த்திகள் காலத்தில் நிலவிய இந்துசமயம் தொடர்பிலான செய்திகளைக் குறிப்பிடும் சேர்மானம்

(1) AC (2) BD (3) CD (4) CE (5) CF

**43.** கோட்டை இராச்சிய காலத்தில் நிலவிய இந்துசமயத்துடன் தொடர்புடைய சேர்மானம்

(1) AC (2) AD (3) AE (4) BE (5) EF

**சைவசித்தாந்தம்**

A - 'விடிவாமளவும் விளக்கனைய மாயை' என மாயையின் இயல்பினை சைவசித்தாந்தம் விளக்குகின்றது.

B - பிராரத்துவ வினையை அனுபவிக்கும்போது தோன்றும் புதிய வினையை 'ஆகாமியம்' என சைவசித்தாந்தம் குறிப்பிடுகிறது.

C - சைவசித்தாந்தம் முத்தி நிலையை 'தாடலை போற் கூடல்' என விளக்குகின்றது.

D - ஒன்றதாய் அநேக சக்தி உடையதாய் விளங்குவது மூலமலம் ஆகும்.

**44.** திருவருட்பயனுடன் தொடர்புடைய சேர்மானம்

(1) AC (2) AD (3) BC (4) BD (5) CD

**45.** ஆணவம், கன்மம் எனும் இருமலங்களுடன் தொடர்புடைய சேர்மானம்

(1) AB (2) AC (3) AD (4) BC (5) BD

● **46** தொடக்கம் **50** வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் ஒரு தலைப்பின் கீழ் ஐந்து விடயங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் தலைப்புக்கு மிகப்பொருத்தமானதைத் தெரிவுசெய்க.

**46.** **வைசேடிகரின் பதார்த்தக் கொள்கை**

(1) பாவம் - அபாவம் என்ற வகைப்பாடுகளை உடையது.
(2) ஈரிணை, மூவிணை அணுக்களைப் பற்றிப் பேசுகிறது.
(3) கணாதரால் தோற்றுவிக்கப்பட்டது.
(4) நவதிரவியங்களையே ஆராய்கிறது.
(5) ஆரம்பவாதம் என அழைக்கப்படுகிறது.

**47.** **விசிட்டாத்வைத சரீரசரீரி**

(1) ஈஸ்வர வாதத்தை முன்னிலைப்படுத்துகிறது.
(2) அப்பிரதக்சித்தியால் விளக்கப்படுகிறது.
(3) விஜாதீய - சஜாதீய பேதங்களால் உணர்த்தப்படுகிறது.
(4) பிரபக்திக்கு அடிப்படையானது.
(5) பரிணாம வாதத்தால் விளக்கப்படுகிறது.

**48.** **சைவசித்தாந்த சுத்தாத்விதம்**

(1) முப்பொருளுண்மையைச் சாதிக்கிறது.
(2) சிவனை முழுமுதற் கடவுளாகக் கொண்டுள்ளது.
(3) நாற்பாதங்களைப் பற்றி விவரிக்கிறது.
(4) குருவின் மூலம் ஈடேறலாம் என விவரிக்கிறது.
(5) ஆன்மா, சிவத்துடன் இரண்டறக் கலத்தல் பற்றிக் குறிப்பிடுகிறது.

**49.** **குடைதளிகள்**

(1) பல்லவர் காலத்திற்குரியவை.
(2) உதயகிரி, திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் காணப்படுகின்றன.
(3) மலைகளைக் குடைந்து அமைக்கப்படுபவை.
(4) மண்டகப்பட்டுக் கல்வெட்டில் முன்மொழியப்பட்டவை.
(5) கட்டுத்தளிகளுக்கு அடிப்படையானவை.

**50.** **ஆதிசங்கரரின் விவர்த்தவாதக் கருத்துக்கள்**

(1) மாயைக்கு இரு நிலைகளுண்டு.
(2) வார்த்தைகளால் விவரிக்க முடியாதது.
(3) பிரம்மம் மாயையால் ஈஸ்வரனாகத் தோற்றமளிக்கிறது.
(4) பிரம்மம் மட்டுமே உண்மைப் பொருள்.
(5) உலகம் 'தோற்றம்' என்பதை விளக்குகிறது.

* * *

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

අ.පො.ස. (උ.පෙළ) විභාගය/ க.பொ.த. (உயர் தர)ப் பரீட்சை - 2019

පැරණි නිර්දේශය/ பழைய பாடத்திட்டம்

විෂය අංකය / பாட இலக்கம்: **42** විෂයය / பாடம்: **இந்து சமயம்**

## ලකුණු දීමේ පටිපාටිය/புள்ளி வழங்கும் திட்டம்

### I පත්‍රය/பத்திரம் I

| ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01. | 5 | 11. | 1 | 21. | 2 | 31. | 4 | 41. | 4 |
| 02. | 5 | 12. | 2 | 22. | 3 | 32. | 5 | 42. | 5 |
| 03. | 4 | 13. | 2 | 23. | 2 | 33. | 1 | 43. | 2 |
| 04. | 3 | 14. | 2 | 24. | 1 | 34. | 1 | 44. | 1 |
| 05. | 2 | 15. | 2 | 25. | 1 | 35. | 4 | 45. | 5 |
| 06. | 3 | 16. | 2 | 26. | 4 | 36. | 3 | 46. | 1 |
| 07. | 4 | 17. | 3 | 27. | 2 | 37. | 1 | 47. | 2 |
| 08. | 3 | 18. | 1 | 28. | 1 | 38. | 2 | 48. | 5 |
| 09. | 1 | 19. | 2 | 29. | 2 | 39. | 2 | 49. | 3 |
| 10. | 5 | 20. | 3 | 30. | 3, 5 | 40. | 3 | 50. | 5 |

✪ විශේෂ උපදෙස්/ விசேட அறிவுறுத்தல் :

එක් පිළිතුරකට/ ஒரு சரியான விடைக்கு 01 ලකුණු බැගින්/புள்ளி வீதம்

මුළු ලකුණු/மொத்தப் புள்ளிகள் 1 × 50 = 50

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

පැරණි නිර්දේශය/ பழைய பாடத்திட்டம்/ Old Syllabus

OLD

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2019 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2019 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2019

හින්දු ධර්මය II
இந்து சமயம் II
Hinduism II

42 T II

06.08.2019 / 0830 – 1140

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

**அறிவுறுத்தல்கள் :**

※ பகுதி **I** இலிருந்து **இரண்டு** வினாக்களையும் பகுதி **II** இலிருந்து **மூன்று** வினாக்களையும் தெரிவுசெய்து, **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி I

**1.** (அ) இந்து சமயத்தின் சிறப்பம்சங்கள் **நான்கு** தருக. (4 புள்ளிகள்)

(ஆ) இந்து சமயத்தின் பரந்த மனப்பான்மையை எடுத்துக்காட்டும் நற்பண்புகள் **நான்கினைக்** குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

(இ) இருக்கு வேதம் கூறும் இயற்கைத் தெய்வங்களின் வகைகளைக் குறிப்பிட்டு, இருக்கு வேதகால வழிபாட்டு முறை பற்றிச் சுருக்கமாக விவரிக்குக. (6 புள்ளிகள்)

(ஈ) உபநிடதம் கூறும் பிரம்மம், ஆன்மா ஆகியன பற்றிச் சுருக்கமாக விளக்குக. (6 புள்ளிகள்)

**2.** (அ) சைவசமய வளர்ச்சிக்குப் பணியாற்றிய பல்லவ மன்னர்கள் **இருவரின்** பெயர்களைத் தருக. (2 புள்ளிகள்)

(ஆ) திருஞானசம்பந்தர் நிகழ்த்திய அற்புதங்கள் **நான்கினைக்** குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

(இ) பல்லவர் கால சைவ பக்தி இலக்கியங்களின் சிறப்பம்சங்களைச் சுருக்கமாக விவரிக்குக. (6 புள்ளிகள்)

(ஈ) பல்லவர் காலக் கோயிற் கட்டடக்கலையின் வளர்ச்சி நிலைகளை விளக்குக. (8 புள்ளிகள்)

**3.** (அ) நாட்டார் கலைகள் என்றால் என்ன? (2 புள்ளிகள்)

(ஆ) கூத்தின் வகைகளைச் சுருக்கமாக விவரிக்குக. (4 புள்ளிகள்)

(இ) கரகாட்டத்தின் சிறப்பம்சங்களை எடுத்துக்காட்டுக. (6 புள்ளிகள்)

(ஈ) கிராமிய வழிபாட்டில் காவடியின் முக்கியத்துவத்தை விளக்குக. (8 புள்ளிகள்)

## பகுதி II

**4.** சங்கரரின் அத்வைத வேதாந்தம் பற்றி மேல்வரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு விளக்குக.

(அ) பொருள் விளக்கமும் மூலங்களும்

(ஆ) பிரம்மம்

(இ) மாயை

(ஈ) விடுதலை (5 × 4 = 20 புள்ளிகள்)

**5.** சைவசித்தாந்த தத்துவத்தில் பதியின் முக்கியத்துவத்தை மேல்வரும் தலைப்புகளில் விவரிக்குக.

(அ) பதியின் இருப்பு

(ஆ) பதியின் இலக்கணங்கள்

(இ) பதியும் ஐந்தொழிலும்

(ஈ) பதியும் ஆன்ம விடுதலையும் (5 × 4 = 20 புள்ளிகள்)

**6.** மனித மேம்பாட்டுக்குப் பண்டிகைகளும் விரதங்களும் உதவுமாற்றை மேல்வருவனவற்றை அடிப்படையாகக் கொண்டு விளக்குக.

(அ) தைப்பொங்கல் பண்டிகை

(ஆ) சிவராத்திரி விரதம் (10 × 2 = 20 புள்ளிகள்)

**7.** **தன்னலமற்ற** அன்புநெறியின் மூலம் மனிதன் பூரணமடையுமாற்றை விளக்குக. (20 புள்ளிகள்)

**8.** மேல்வருவனவற்றுள் எவையேனும் **நான்கிற்குச்** சிறுகுறிப்பு எழுதுக.

(அ) பஞ்சாங்கம்

(ஆ) மகாபுராணங்கள்

(இ) இந்துபோர்ட் சு. இராசரத்தினம்

(ஈ) அகில இலங்கை இந்துமாமன்றம்

(உ) பொலன்னறுவைக் காலத்தில் இந்துமதம்

(ஊ) இந்து சமயமும் சமகாலத் தொடர்பாடலும் (5 × 4 = 20 புள்ளிகள்)

* * *

**01.**

**அ) இந்து சமயத்தின் சிறப்பம்சங்கள் நான்கு தருக. (4 புள்ளிகள்)**

**ஆ) இந்து சமயத்தின் பரந்த மனப்பான்மையை எடுத்துக்காட்டும் நற்பண்புகள் நான்கினைக் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)**

**இ) இருக்கு வேதம் கூறும் இயற்கைத் தெய்வங்களின் வகைகளைக் குறிப்பிட்டு இருக்கு வேதகால வழிபாட்டு முறை பற்றி சுருக்கமாக விவரிக்குக. (6 புள்ளிகள்)**

**ஈ) உபநிடதம் கூறும் பிரமம், ஆன்மா ஆகியன பற்றிசுருக்கமாக விளக்குக. (6 புள்ளிகள்)**

**அ.**

- மிகப்பழைமையானது.
- சநாதனதர்மமாக உள்ளது.
- ஒருவராலும் தோற்றுவிக்கப்படாதது.
- மிகப்பரந்த நோக்குடையது.
- வாழ்க்கை வாழ்வதற்கே என்ற அடிப்படையைக் கொண்டது.
- மனித மேம்பாட்டை மையப்படுத்துவது.
- மிகப்பழைய இலக்கிய பாரம்பரியத்தை உடையது.
- வழிபாட்டுச் சுதந்திரமுடையது – இயற்கை வழிபாடு, ஓர் இறை வழிபாடு, பல கடவுள் வழிபாடு
- எல்லோரையும் கடவுளின் குழந்தையாகக் கொண்டு சகோதரத்துவத்துடன் வாழ வைப்பது.
- வேற்றுமையில் ஒற்றுமை காணச்செய்வது.
- உருவ, திருக்கோயில் வழிபாடுகளைக் கொண்டது.
- உலகியலையும் ஆன்மிகத்தையும் இணைப்பது.
- கலைகளின் வழியே கடவுளை ஆராதிக்கும் பண்பை வெளிப்படுத்தி நிற்பது.
- அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கு புருடார்த்தங்களின் வழியே இகபர சுகங்களை அடைய வழிகாட்டுவது.
- ஆன்மிக ஒருமைப்பாட்டை விளக்கி நிற்பது.
- கிரியைகள் சடங்குகளை வாழ்வியலாகக் கொண்டது.
- உன்னதமான செயலையும் உயர்ந்த ஞான நெறியையும் பக்தியையும் விடுதலைக்குரிய வழிகளாகக் கூறுவது.

**(04 புள்ளிகள்)**

**ஆ. இந்து சமயத்தின் பரந்த மனப்பான்மை.....**

- சகோதரத்துவம், அன்பு, ஜீவகாருண்யம், கடமையுணர்வு, தொண்டு நெறி, கூட்டுப்பொறுப்பு, பிறமதக் கருத்துக்களை ஏற்று மதித்துப் போற்றுதல்.
- உலகவிடுதலைக்கான வேண்டுதல்,
- ஆன்மிக ஒருமைப்பாடு.

  "குறைவிலாது உயிர்கள் வாழ்க"

  "இன்பமே சூழ்க"

  "யாதும் ஊரே யாவரும் கேளீர்"

**(04 புள்ளிகள்)**

**இ. இருக்கு வேதம் கூறும் இயற்கை வழிபாடு.......**

- வேதகால மக்கள் இயற்கை சக்திகளை பயம், தேவை என்பன கருதி வழிபட்டனர்.
- இயற்கை சக்திகள் 33 தெய்வங்களாக போற்றப்பட்டமை.
- இவை மண்ணுக்குரியவை, விண்ணுக்குரியவை, இடைவெளிக்குரியவை என மூவகைப்படும்.
  உதாரணத்துடன் விளக்குதல்.
- வழிபாட்டு முறை – இயற்கை வழிபாடு, எரியோம்புதல் வழிபாடு, இசையுடன் கூடிய தோத்திர வழிபாடு, மந்திர வழிபாடு, **(06 புள்ளிகள்)**

**ஈ. உபநிடதம் கூறும் பிரமம், ஆன்மா....**

- உபநிடதங்களில் குரு – சீட உறவு முறையில் பிரமம் ஆன்மா பற்றிக் கலந்துரையாடப்பட்டன.
- வினாவிடை, கலந்துரையாடல், செய்முறை, தர்க்கம் முதலான அமைப்புகளில் இவை பற்றி விளக்கப்பட்டுள்ளன.
- **பிரமம்** – 'ப்ரஹ்' என்ற வினையடியில் இருந்து தோன்றியது.
- அனைத்துக்கும் அடிப்படையானது.
- சொல்லால் விளக்கமுடியாதது.
- நித்தியமானது.
- பரிபூரணமானது.
- ஓங்காரரூபமாக அறியப்படுவது.
- சர்வவியாபகமானது.
- இருநிலைகளையுடையது
- பிரமம் பற்றிய மகாவாக்கியங்கள்.
  (உபநிடதக் கருத்துக்களை ஆதாரங்காட்டி விளக்குதல் வேண்டும்.)
- **ஆன்மா** – உடலை இயக்குவது எதுவோ அதுவே ஆன்மா.
- இந்திரன் – பிரஜாபதி, விரோசனன், யமன் – நசிகேதன் உரையாடல்களூடாக ஆன்மா பற்றி விளக்குதல்.
- வண்டியில் கட்டிய குதிரை, புல் நுனி தாவும் புழு, அநேக தீப்பொறிகள்........
- பஞ்ச கவசங்களால் ஆனது.
- உருவமற்றது.
- இருவகை முத்தி – வழிகள்
  (உபநிடதக் கருத்துக்களை ஆதாரங்காட்டி விளக்குதல் வேண்டும்.)

**(06 புள்ளிகள்)**

**02. அ) சைவசமய வளர்ச்சிக்குப் பணியாற்றிய பல்லவ மன்னர்கள் இருவரின் பெயர்களைத் தருக. (2 புள்ளிகள்)**

**ஆ) திருஞானசம்பந்தர் நிகழ்த்திய அற்புதங்கள் நான்கினைக் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)**

**இ) பல்லவர் கால சைவபக்தி இலக்கியங்களின் சிறப்பம்சங்களைச் சுருக்கமாக விபரிக்குக (6 புள்ளிகள்)**

**ஈ) பல்லவர்கால கோயிற்கட்டடக்கலையின் வளர்ச்சி நிலைகளை விளக்குக (8 புள்ளிகள்)**

**அ. பல்லவ மன்னர்கள் இருவரின் பெயர்கள்**

- சிவாஸ்கந்தவர்மன்
- மகேந்திரவர்மன்.
- மாமல்லன்.
- பரமேஸ்வரவர்மன்.
- இராஜசிம்மன்.
- நந்திவர்மன் **(02 புள்ளிகள்)**

**ஆ. திருஞான சம்பந்தர் ஆற்றிய அற்புதங்கள் நான்கு**

- ஆண்பனைகளைப் பெண்பனைகளாக்கியமை.
- படிக்காசு பெற்றமை.
- திருக்கதவம் அடைக்கப்பாடியமை.
- பூம்பாவையை உயிர்ப்பித்தமை.
- பாலை நிலத்தை நெய்தல் நிலமாக்கியமை.
- அனல் வாதம், புனல் வாதம் புரிந்தமை முதலானவை...... **(04 புள்ளிகள்)**

**இ. சைவபக்தி இலக்கியங்களின் சிறப்பம்சங்கள்**

- இறைவனை அன்பு வழியில் வழிபடுதல்.
- தோத்திர மரபை உருவாக்கியமை.
- பல்வேறு உறவு முறையில் உருவகித்துப்பாடியமை.
- இயற்கையில் இறைவனைக் காணுதல்.
- இதிகாச புராணச் செல்வாக்கினைக் கொண்டுள்ளமை.
- புதிய யாப்பு, பதிக அமைப்பு முறைகள் உருவானமை.
- சிற்றிலக்கிய வடிவங்களை கொண்டுள்ளமை.
- தனிமனித, சமூக, ஆன்மிக பண்பாட்டை அறிந்துக்கொள்வதற்கான மூல நூல்கள்

**(06 புள்ளிகள்)**

**ஈ. பல்லவர் கால கட்டடக்கலை வளர்ச்சி....**

- உறுதியான பொருட்களைக் கொண்டு கோயில்கள் எழுதல் – மண்டகப்பட்டுக்கல்வெட்டு, " இக்கோயில் மண், மரம், சுதை என்பனவின்றி........"
- குடைதளிகள் / குடைவரைகள்
- மலைதளிகள் / ஒற்றைக்கற் கோயில்கள் / ரதக் கோயில்கள்
- கட்டுத்தளிகள் / கற்றளிகள்
- மன்னர்களின் பாணிகளைக் கொண்டு வகைப்படுத்துதல்
  1. மகேந்திரவர்மன் பாணி
  2. மாமல்லன் பாணி
  3. இராஜசிம்மன் பாணி
  4. நந்திவர்மன் பாணி
- கோயில்கள் காணப்படும் இடங்களை உதாரணங்களுடன் விளக்குதல் வேண்டும்.
- பெரியதிருக்கற்றளி – காஞ்சி கைலாசநாதர் கோயில்.

**(08 புள்ளிகள்)**

**03.** **அ) நாட்டார் கலைகள் என்றால் என்ன? (2 புள்ளிகள்)**
**ஆ) கூத்தின் வகைகளை சுருக்கமாக விபரிக்குக. (4 புள்ளிகள்)**
**இ) கரகாட்டத்தின் சிறப்பம்சங்களை எடுத்துக்காட்டுக (6 புள்ளிகள்)**
**ஈ) கிராமியவழிபாட்டில் காவடியின் முக்கியத்துவத்தினை விளக்குக. (8 புள்ளிகள்)**

**அ. நாட்டார் கலைகள் என்றால் என்ன?**

- இயற்கைப் பொருட்களை அடிப்படையாகக் கொண்டு செயற்படும் செயற்பாடுகளால் மக்களைக் களிப்படையச் செய்யும் கலைகளே நாட்டார் கலைகளாகும்.

**(02 புள்ளிகள்)**

**ஆ. கூத்தின் வகைகள்...**

- இருவகைப்படும்.
  வடமோடி – வடபாங்கு,
  தென்மோடி – தென்பாங்கு.
- இதிகாச புராணக் கதைகளைத் தழுவி கூத்துக்கள் இடம்பெறுகின்றமை.
- நாயன்மார்களுடைய வாழ்க்கை முறைகளும் கூத்துக்களில் இடம்பெறுகின்றமை.
- வடமோடிக் கூத்து – அலங்காரம் தாளக்கட்டு, ஒப்பனைகள் பற்றிய விளக்கம்.
- தென்மோடிக் கூத்து – அலங்காரம் தாளக்கட்டு, ஒப்பனைகள் பற்றிய விளக்கம்.

**(04 புள்ளிகள்)**

**இ. கரகாட்டத்தின் சிறப்பு...**

- கரகாட்டம் என்பதன் பொருள் விளக்கம்.
- மறுபெயர்கள் – குடக்கூத்து, பூம்பந்தல், செம்பாட்டம், பூங்குடம்.
- ஆடப்படும் நோக்கம்
- ஒப்பனைகள்
- கரகத்தின் வகைகள்.
- வழிபாட்டில் கரகம்.
- சமய சமூக முக்கியத்துவம். **(06 புள்ளிகள்)**

**ஈ. காவடியின் முக்கியத்துவம்**

- ஆரம்பத்தில் முருக வழிபாட்டுடன் மிகுதியும் தொடர்புடையது.
- காவடி – பொருள்விளக்கம்
- அமைப்பு முறை
- காவடி எடுப்பதன் நோக்கம்.
- வன்பக்தி, மென்பக்தி நிலையில் காவடியாட்டம்.
- நேர்த்திக் கடனை மையப்படுத்தியது.
- ஆகமம் சாரா வழிபாட்டில் முக்கியத்துவம் பெற்றிருக்கின்றமை.
- சமூக ஒருமைப்பாடு வளர்தல்.
- இசை வளர்ச்சி
- கரகத்துடன் இணைந்தும் இசை வளர்க்கப்படுகிறது.
- சமய சமூக முக்கியத்துவம்.

**(08 புள்ளிகள்)**

**04. சங்கரரின் அத்வைத வேதாந்தம் பற்றி மேல்வரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு விளக்குக.**

**அ) பொருள் விளக்கமும் மூலங்களும்**
**ஆ) பிரம்மம்**
**இ) மாயை**
**ஈ) விடுதலை** **(5 x 4 = 20 புள்ளிகள்)**

**அ. பொருள் விளக்கமும் மூலங்களும்**

- அ + துவைதம் = அத்வைதம். அ – அல்ல, துவைதம் – இரண்டு, ஆகவே உண்மைப் பொருள் இரண்டல்ல ஒன்று.
- பிரமம் மட்டுமே உண்மை ஏனைய உயிர்களும் உலகமும் தோற்றம்.
- மூலங்கள் – பிரஸ்தான திரயங்கள், மாண்டுக்கிய காரிகை

**(05 புள்ளிகள்)**

**ஆ. பிரமம்**

- பிரமம் மட்டுமே உண்மை ஏனைய உயிர்களும் உலகமும் தோற்றம்.
- பிரம்மம் சத்யம் ஜகத்மித்யா
- ஒருமைவாதம், ஏகான்ம வாதம்
- பூரணப் பொருள் – சுத்த சைதன்ய வஸ்து.
- நிர்க்குணப்பிரம்மம் மாயையால் சகுணப்பிரம்மம் ஆதல் – ஈஸ்வர நிலை.
- நிர்க்குணப் பிரமத்துக்கு முக்கியத்துவம்.

**(05 புள்ளிகள்)**

**இ. மாயை**

- அநிர்வசனியப் பொருள் / அவாச்சியப்பொருள்
- அவித்தை, ஆரோபம் முதலிய பெயர்கள்.
- ஆவரணம், விக்ஷேபம் எனும் இருவகை ஆற்றல்கள்.
- மாயாவாதம்..
- பிரமமே மாயையின் காரணமாக உயிர்களாகவும், உலகமாகவும் தோற்றமளித்தல்.
- மாயையின் இயல்புகள், தொழிற்பாடுகள் முதலானவற்றை விளக்குதல் வேண்டும்.
- பிரதிவிம்பவாதம், விவர்த்தவாதம், அவச்சேதவாதம், ஆபாசவாதம் ஆகியவை மாயையை அடிப்படைக் கொண்டு கட்டமைக்கப்பட்ட கருத்தாடல்கள் ஆகும்.

**(05 புள்ளிகள்)**

**ஈ. விடுதலை**

- ஆன்மா தன்னை பிரம்மமாக உணர்தல் – இருமையற்ற தன்மை.
- இருவகை முத்தி நிலைகள் – ஜீவன்முத்தி, விதேகமுத்தி
- ஜீவன் முத்தியை சிறப்பித்தல்
- ஞானம் விடுதலைக்கான வழி – தன்னை பிரமமாக உணர்தல்
- ஞானத்துக்கான படிநிலைகள் – சிரவணம், மனனம், நிதித்தியாசனம்

**(05 புள்ளிகள்)**

**05. சைவசித்தாந்த தத்துவத்தில் பதியின் முக்கியத்துவத்தை மேல்வரும் தலைப்புக்களில் விவரிக்குக.**

**அ) பதியின் இருப்பு**

**ஆ) பதியின் இலக்கணங்கள்**

**இ) பதியும் ஐந்தொழிலும்**

**ஈ) பதியும் ஆன்ம விடுதலையும்** **($5 \times 4 = 20$ புள்ளிகள்)**

**அ. பதியின் இருப்பு**

- உலகின் இருப்பைக் கொண்டு பதியின் உண்மையை நிறுவுதல்
- கன்மக்கொள்கையூடாக நிறுவுதல்
- உலகின் தொழிற்பாட்டொழுங்கைக் கொண்டு நிறுவுதல்.
- தோத்திர சாத்திர நூல்கள் சான்று காட்டப்பட வேண்டும்.
  "அவனவளது...."
  "செய்வானும் செய்வினையும்..."
  "காரிய காரணங்கள் முதல் துணை நிமித்தம்.."

**(05 புள்ளிகள்)**

**ஆ. பதியின் இலக்கணங்கள்**

- பதியின் இருவகை இலக்கணங்கள் – சொரூபம், தடத்தம்
- சொரூப இலக்கணம் – மேற்கோள்
  "பதிபரமே அதுதான....."
  "பெருமைக்கும் நுண்மைக்கும்...."
- எண்குணங்கள்
- தடத்த இலக்கணம் – மேற்கோள்
  "நாடரிய கருணை....."
  "அருவம் உருவும்...."
- மூவகைத் திருமேனிகள்
- நவபேதங்கள்

**(05 புள்ளிகள்)**

**இ. பதியும் ஐந்தொழிலும்**

- பஞ்ச கிருத்தியம் – உயிர்களின் பொருட்டு சக்தியுடன் இணைந்து மேற்கொள்ளப்படுவது.
- பாடல் மேற்கோள்கள்
  "தோற்றம் துடியதனில்....."
  "அழிப்பிழைப் பாற்றலாக்கும் அவ்வவர் கன்மமெல்லாம்...."
- ஒவ்வொரு தொழில் குறித்தும் சித்தாந்த சாத்திரங்களைத் துணைக்கொண்டு விளக்குதல் வேண்டும்.

**(05 புள்ளிகள்)**

**ஈ. பதியும் ஆன்ம விடுதலையும்**

- சுத்தாத்வித முத்தி – தாடலை
  “தாடலை போல் கூடியவை.....”
- நால்வகை மார்க்கம், குருலிங்க சங்கம வழிபாடு, தீட்ஷை முறைகள், ஆலய வழிபாடு
  “ஆலயம் தானும் அரன் எனத் தொழுமே”
- இருவினையொப்பு – மலபரிபாகம் – சத்திநிபாதம்
- பதி அருளின் அவசியம்.
  “அவனருளாலே அவன் தாள் வணங்கி”
  “குருவருளின்றித் திருவருள் இல்லை”
- நால்வகை முத்திகள் – சாலோகம், சாமீபம், சாரூபம், சாயுச்சியம்.
  தோத்திர, சாத்திர நூற்கருத்துக்களை ஆதாரங்காட்டி விளக்கப்பட வேண்டும்.

**(05 புள்ளிகள்)**

**06. மனிதமேம்பாட்டுக்கு பண்டிகைகளும் விரதங்களும் உதவுமாற்றை மேல்வருவனவற்றை அடிப்படையாகக்கொண்டு விளக்குக.**

**அ) தைப்பொங்கல் பண்டிகை**

**ஆ) சிவராத்திரி விரதம்** **(10 x 2 = 20 புள்ளிகள்)**

**அ. தைப்பொங்கல் பண்டிகை**

- சூரியன் தனுராசியில் இருந்து மகரராசிக்குச் செல்லும் தினம்.
- மகர சங்கிராந்தி, தை முதல்நாள், உழவர் திருநாள், அறுவடைத்திருநாள் எனவும் சுட்டப்படல்.
- சூரிய வழிபாடு, பொங்கல் – நன்றிமறவாமை
- போகிப்பண்டிகை (முதல் நாள்)– பட்டிப்பொங்கல் (மறுநாள்)
- சுற்றத்தாரோடு சூழ இருத்தல்
- சமூக ஒன்றுகூடல்..
- விருந்துண்ணுதல்
- பெரியோர்களைக் கனம் பண்ணுதல்
- அன்றைய தினம் இடம்பெறும் கலை நிகழ்வுகள் மூலம் சமூக ஒருமைப்பாடு
- பாரம்பரிய விளையாட்டுக்களை மீட்டுருவாக்கம் செய்தல்
- அறப்பண்புகளை வளர்த்தல்......

**(10 புள்ளிகள்)**

**ஆ. சிவராத்திரி விரதம்**

- சிவவிரதங்களில் ஒன்று
- சிவராத்திரி விரதத்துடன் தொடர்புடைய ஐதிகக் கதைகளை சுருக்கமாகக் குறிப்பிடுதல்.
- சிவராத்திரி வகைகள்
- அனுட்டிக்கும் முறைகள்
- விரதப் பயன்
- முக்கிய ஆலயங்கள் **(10 புள்ளிகள்)**

**07. தன்னலமற்ற அன்பு நெறியின் மூலம் மனிதன் பூரணமடையுமாற்றை விளக்குக.**

- தன்னலமற்ற அன்பு நெறி பக்தி யோகம் எனப்படும்.
- பகவத்கீதையில் மனிதவிடுதலைக்காக 3வழிகள் கூறப்படுகின்றன.
  கர்மம் – செயல்வழி
  பக்தி – அன்புவழி
  ஞானம் – அறிவுவழி
- நாரதர் ஆழ்ந்த இறைபற்றே பக்தி என்கிறார்
- மணவாளரின் பக்தி பற்றிய விளக்கம்.
- ஏனைய ஞானிகளின் கருத்துக்கள்
- பக்தியின் வகைகள்
  ஆசாரபக்தி
  பிரபக்தி
  வன்பக்தி
  மென்பக்தி
- அகங்கார மமகாரமற்ற அன்பு
- பகவத்கீதையில் பக்தி யோகத்தில் கூறப்படும் கருத்துக்கள் (7 – 12 அத்தியாயங்கள்)
- மாணிக்கவாசகர் – "அன்பினில் விளைந்த ஆரமுதே"
- கர்மம், ஞானம் அனைத்தும் அன்புக்கான வழிகள்
- அன்பு மனிதனைப் பூரணப்படுத்துதல்.

**(20 புள்ளிகள்)**

**08. மேல்வருவனவற்றுள் எவையேனும் நான்கிற்குச் சிறுகுறிப்பு எழுதுக.**

**அ) பஞ்சாங்கம்**
**ஆ) மகாபுராணங்கள்**
**இ) இந்துபோர்ட் சு. இராசரத்தினம்**
**ஈ) அகிலஇலங்கை இந்துமாமன்றம்**
**உ) பொலநறுவைக் காலத்தில் இந்துமதம்.**
**ஈ) இந்துசமயமும் சமகாலத் தொடர்பாடலும்** **($5 \times 4 = 20$ புள்ளிகள்)**

**அ. பஞ்சாங்கம்**

- இந்துக்களின் காலக்கணிப்புடன் தொடர்புடையது
- 5அங்கங்கள் – நாள், திதி, வாரம், யோகம், கரணம் பற்றிய விளக்கம்
- சுபகாரியங்களை (பஞ்சாங்க கணிப்பின் மூலம் மேற்கொள்ளுதல்)
- சோதிடக் கலையில் பஞ்சாங்கம் மிக முக்கிய கூறாக அமைகிறது.

**(05 புள்ளிகள்)**

**ஆ. மகாபுராணங்கள்**

- புராணம் என்பதன் பொருள்
- எண்ணிக்கை
- வகை (மகா புராணங்கள்)
  சிவபுராணங்கள், விக்ஷ்ணு புராணங்கள், பிரம புராணங்கள் அக்கினி புராணம், சூரிய

புராணம்.

- ஆதிபுராணம், அக்ஷ்டதச புராணம், பதினெண் புராணங்கள் எனப்படுதல்.
- பஞ்ச மற்றும் தச இலக்கணங்கள்
- பொருண்மைகள்
- பிற்கால இந்துப் பண்பாட்டு விருத்திக்கு அடிப்படையாக அமைதல்.

(05 புள்ளிகள்)

**இ. இந்துபோர்ட் சு. இராசரத்தினம்**

- பிறப்பும் கல்வியும்
- சமயப்பணி - கல்விப்பணி
- சைவமரபுகளைப் பேணல்
- சைவவித்தியா விருத்திச்சங்கத்தை தோற்றுவித்தவர்களில் இவரும் ஒருவர்.
- சைவாசிரியர் கலாசாலை உருவாக்கம்
- திருமுறை ஓதுவதற்கான சூழல் உருவாக்கம்.
- சைவாசிரியர்களைப் பயிற்றுவித்தல்.
- சைவப்பாடசாலைகளை நிர்வகித்தல்.
- அனைவருக்குமான கல்வி (05 புள்ளிகள்)

**ஈ. அகில இலங்கை இந்துமாமன்றம்**

- உருவாக்கச்சூழல் - 1955.
- நோக்கம்
- தலைமையகம் - கொழும்பு
- சமய, சமூகப் பணிகள்
- இந்து சமயப் பேணலுக்கான செயற்பாடுகள்.
- இந்து சமயிகளின் வறுமையைப் போக்க உதவுதல்
- சிவதொண்டர் அணி உருவாக்கம்
- பெண்தலைமைத்துவக் குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தல்.
- சமயப்பிரசாரகர்களை உருவாக்குதல்
- கல்விக்கான ஊக்குவிப்புகளை வழங்குதல்
- திருக்கோயில்களின் பரிபாலனம் (05 புள்ளிகள்)

**உ. பொலநறுவைக் காலத்தில் இந்துமதம்.**

- காலம்
- மும்முடிச் சோழ மண்டலம் - சோழரின் ஒன்பதாவது மாகாணம்
- ஜனநாதபுரம், ஜனநாத மங்கலம், புலஸ்தியபுரம்
- திருக்கோயில்கள் - 10 சிவன் கோயில், 5 விக்ஷ்ணு கோயில், ஒரு சக்தி கோயில் - அழிபாடுகள்
- இரண்டாம் சிவாலயமான வானவன் மாதேவி ஈஸ்வரத்தின் சிறப்பு
- வாரிவனேஸ்வரம், உருத்திரபுரேஸ்வரம், மண்ணித்தலை,
- சதுர்வேதி மங்கலங்களை அமைத்தலும் நிவந்தங்களை வழங்குதலும்
  விஜயராஜ சதுர்வேதி மங்கலம், இராஜராஜசதுர்வேதி மங்கலம் போன்றன....

**(05 புள்ளிகள்)**

**ஊ. இந்துசமயமும் சமகாலத் தொடர்பாடலும்**

- காலந்தோறும் வெவ்வேறு வகை ஊடகங்களால் இந்துசமயம் வளர்ந்துள்ளது.
- மரபுவழிச் சாதனம், சொல்வழித் தொடர்பு, வெளிப்புறச் சாதனம், தகவல் தொழினுட்ப சாதனங்கள் போன்ற தொடர்பு சாதனங்களால் சமகாலத்தில் இந்துப்பண்பாடு பற்றிய செய்திகள் பரவாலாக்கப்படல்.

**(05 புள்ளிகள்)**